கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.


பங்குனி மாத இதழ்
NEWS BULLETIN
MARCH 2025
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

.

நாள்	நிகழ்வு
	கொவன்றி தமிழ்மொழிக் கலைக் கழகம் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் 45 BLONDVIL ST COVENTRY CV3 5EQ எனும் முகவரியில் நடைபெறுகின்றது
12/04/2025	தமிழ்ப் பரீட்சைகள் (கேட்டல், எழுதுதல், வாசித்தல்)
19-20/04/25	ஈஸ்டர் விடுமுறை

SATURDAY	Time
Tamil	9.45am-12.30pm
Free Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	1.00pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 4.00pm
Free 11plus Verbal & Nonverbal (Mrs. Gayathri teacher)	2.00pm – 4.00pm
SUNDAY	**Time**
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 2.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	10.00am – 2.00pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	10.00am – 2.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	9.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	12.00pm – 2.00pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	1.00pm – 4.00pm
Tamil	11.00am – 12.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D teacher)	10.00am – 12.00am
Free 11plus Maths (Mr.Krish teacher)	9.00am – 11.00am





45 Blondvil St



பத்து மாதம் கருவிலும்
பகலிரவாய்த் தன் உருவிலும்
செத்து மடிந்தாலும் தன் உள்ளத்திலும்
சுமப்பவரே அன்னை!

உருவம் தந்து எமக்கு இந்த
உலகைக் காட்டியவர் அன்னை!
பருவங்கள் பல கடந்தாலும் - மாறாப்
பாசத்தோடு வளர்ப்பவர் அன்னை!

தன்னை வருத்தி,
தன் பிள்ளையைக் காக்கும்
அன்னையின் அன்பிற்கு - இந்த
மண்ணையும் விண்ணையும்
அளந்தாலும் ஈடாகுமோ!





கதம்பம் பல்சுவை நிகழ்வு

06/03/2025 அன்று நடைபெற்ற கதம்பம் நிகழ்வில், செல்வன் கவிஷன் மயூரன் உலக நீதியிலிருந்து பாடலையும், சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரிஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் லிங்கா சர்வானந்தலிங்கம் சுரத்தட்டு இசையையும், வீணை மற்றும் வயலின் ஆசிரியை "கலாஜோதி" செல்வி வாரணி சரவணதாசன் அவர்களின் மாணவி செல்வி பார்கவி பாலகிருஷ்ணன் வயலின் இசையையும், 'நாட்டிய கலாநிபுண" "நுண்கலைமானி" ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் அவர்களின் மாணவி செல்வி ஜனுஜா அகிலன் நடனத்தையும் வழங்கியிருந்தனர்.






13/03/2025 அன்று நடைபெற்ற கதம்பம் நிகழ்வில் சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரிஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவி செல்வி பிரணதி ஜித்து சபரிஷ் சுரத்தட்டு இசையையும், செல்வி சபீனா கோகிலநாதன் பொன்மொழிகளையும், செல்வி ஜேர்த்திகா ஜெயதீஸ்வரன் "நான்குநாட் தைப்பொங்கல்" என்ற கவிதையையும் வழங்கியிருந்தனர்.





20/03/2025 அன்று நடைபெற்ற கதம்பம் நிகழ்வில், செல்வி மோனிகா ஜெய்கணேஷ் திருக்குறளையும், "கானகலாதர" "சங்கீத கலாநிபுண" "இசைவாணர்" திரு தீனதயாளன் பத்மநாதன் அவர்களின் மாணவன் செல்வன் லக்ஸன் திருவரங்கன் பாடலையும், "பரதக்கலாவித்தகர்" "நாட்டிய கலாநிபுண" "கலைமானி" ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் அவர்களின் மாணவிகள் செல்வி மோனிகா ஜெய்கணேஷ், செல்வி தருண்யா பகீரதன், செல்வி வர்ஷிதா ஜெயசங்கர், ஆகியோர் நடன நிகழ்வையும் வழங்கியிருந்தனர்.





.

27/03/2025 அன்று நடைபெற்ற கதம்பம் நிகழ்வில், செல்வி ஆராதனா றமேஸ் "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்னும் தலைப்பில் பேச்சையும், செல்வன் மகிழன் சதீஸ்குமார் "அச்சமில்லை அச்சமில்லை" என்ற பாடலையும், செல்வன் அர்சன் ரஜீந்திரன் "சின்ன சின்ன வண்டி கட்டி" என்ற பாடலையும்,

"பரதக்கலாவித்தகர்" "நாட்டிய கலாநிபுண" "கலைமானி" ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் அவர்களின் மாணவிகள் செல்வி ஜேர்த்திகா ஜெயதீஸ்வரன், செல்வி ஆரதி சியாமளன், செல்வி சஸ்மிதா பாஸ்கரன் ஆகியோர் "சிவகீர்த்தனம்" என்னும் நடன நிகழ்வையும் வழங்கியிருந்தனர்.









தமிழ்த்திறன் போட்டிகள்

கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகம் நடாத்திய தமிழ்த்திறன் போட்டிகள் 22/03/2025 அன்று நடைபெற்றன. அதற்கு நடுவர்களாக யோக்செயார் தமிழ்ப் பொதுப் பாடசாலை தலைமை ஆசிரியை மற்றும் தமிழ் ஆசிரியர்களோடு, கொவன்றியிலிருந்தும் ஒரு ஆசிரியையும் கலந்துகொண்டு போட்டிகளைத் திறம்பட நடாத்தியிருந்தார்கள்.



15/03/2025 அன்று யோக்செயார் தமிழ்ப் பொதுப் பாடசாலை நடாத்திய ஆண்டுவிழாவுக்கு கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தையும் அன்போடு அழைத்திருந்தனர். அந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டோர்.



கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக நடன ஆசிரியைகளில் ஒருவரான "பரதக்கலாவித்தகர்" "நாட்டிய கலாநிபுண' "கலைமானி" ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் ஆசிரியை யோக்செயார் தமிழ்ப் பொதுப் பாடசாலையின் நடன ஆசிரியையாகவும் இருப்பதோடு, அன்றையதினம் மிகவும் சிறப்பான நடனங்கள், நாட்டிய நாடகம் என்பவற்றை அரங்கேற்றித் தனது திறமையை அங்கும் அழகாக வெளிக்காட்டி இருந்தார்.

புனித ரமழான்

இஸ்லாமிய நாட்காட்டியின் ஒன்பதாவது மாதமான ரமலான். மாதம் முழுவதும் இஸ்லாமியர்களால் நோற்கப்படும் நோன்பு ஆகும். இந்நாட்களில் நோன்பு அனுசரிப்பவர்கள் அதிகாலை முதல் மாலை வரையில், உண்ணாமல், நீரருந்தாமல், புகைக்காமல், மற்றும் வேறு தீய பழக்கங்களில் ஈடுபடாமல் இருப்பர். இது இஸ்லாமின் ஐந்து அடிப்படை கடமைகளில் மூன்றாவது கடமையாகும். இம்மாதத்திலும் நன்மைகள் செய்யாதவர் எல்லா நன்மைகளையும் இழந்தவர் என்றும், இந்த மாதத்தில் அல்லாவிடம் பாவமன்னிப்புக் கேட்காதவர் அல்லாவின் அருளை விட்டுத் தொலைவில் இருப்பார்கள் என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்.

